பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

Registered as a News Paper பக்கங்கள் 06 விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 சித்திரை 4 (17.4.94) ஞாயிற்றுக்கிழமை ஓசை 58

## செப்டெம்பர் மாத மாணவர் உணவு முத்திரை விநியோகம்

யாழ் மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான செப்டெம்பர் மாத மதிய உணவு முத்திரைக்கான உணவுப் பொருள் விநியோகம் பல நோ[illegible] சங்கக் கிளைகள் ஊடாக விரைவாக வழங்கிவிருப்பதால், சகல பாடசாலைகளின் வகுப்பு ஆசிரியர்கள் நாளை திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு அதிபரைச் சந்தித்து உணவு முத்திரை விநியோகத்தை உறுதிப்படுத்துவதுடன் ஆண்டு 2 தொடக்கம் ஆண்டு 13 மாணவர்கள் எதிர்வரும் புதன்கிழமை 9 மணிக்கு பாடசாலைகளுக்குச் சென்று உணவு முத்திரைகளைப் பெற்றுக் கொள்ளும்படி கல்விக் கோட்டங்களின் பிரதிக்கல்விப்பணிப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

# வெளிநாட்டு உல்லாசப் பயணிகளுக்கு ‘எல்லாளன்படை’ பகிரங்க எச்சரிக்கை!

## கசிப்பு தயாரித்தவர் காவல்துறையால் கைது

(வடமராட்சி)

சட்ட விரோதமாக கசிப்பு உற்பத்தி செய்த ஒருவர் பருத்தித்துறை காவல் துறையினரால் கையும் மெய்யுமாக கைது செய்யப்பட்டார். காவல் துறையினர் இவரிடம் இருந்து 50 போத்தல் கோடாவும், 8 போத்தல் கசிப்பும் மீட்டனர்.

அல்வாய் மேற்கு கட்டைப் புலியடியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு காவல்துறையினரால் கைது செய்யப்பட்டவராவார் இந் நபர் காவல் துறையினரால் பருத்தித்துறை நீதிமன்றம் முன் ஆஜர் செய்யப்பட்டார்.

நீதியாளர் இவரது குற்றத்திற்காக 80 ஆயிரம் ரூபா குற்றப்பணமும், 3 மாதச் சிறையும் அபராதமாக விதித்துள்ளார். (யோ)

## தென்மாகாண தேர்தல் முறைகேடு குறித்து வழக்கு

(கொழும்பு)

தென்மாகாண சபைக்கான தேர்தலின் போது காலி மாவட்டத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பில் பல முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக காலி மாவட்டத்தைச் சேர்ந்த ஏ. அனுர தேர்தல் ஆட்சேப மனு ஒன்றை தாக்கல் செய்யவுள்ளார்.

காலி மாவட்டத்தில் நடைபெற்ற வாக்குப் பதிவின் போதும் வாக்குகள் கணக்கெடுக்கும் நடவடிக்கையின் போதும் பல ஒழுங்கீனங்கள் நடைபெற்றுள்ளது எனவும், இது தேர்தல் சட்டங்களுக்கும் முரணானது என தெரிவித்தார்.

எனவே காலி மாவட்டத்தில் தேர்தல்களை மீள நடத்த வேண்டும். அல்லது வாக்குகளை மீளக் கணக்கெடுத்தல் வேண்டும் என அவர் அம் மனுவில் குறிப்பிடவுள்ளார்.

## வவுனியாவில் தங்குவோர் அனுமதி பெறவேண்டும்

## கொழும்பு வருவதைத் தவிர்த்துக் கொள்க முதலீட்டாளர்களிடமும் கோரிக்கை

[கொழும்பு]

சிறிலங்காவிற்கு உல்லாசப் பயணம் வருவதை நிறுத்திக் கொள்ளுமாறும், முதலீடுகள் செய்வதை கைவிடுமாறும் வெளிநாட்டு உல்லாசப்பயணிகளிடமும், முதலீட்டாளர்களிடமும் எல்லாளன் படை கோரிக்கை விடுத்துள்ளது இக் கோரிக்கையை கருத்திற் கொள்ளாது வெளிநாட்டவர் சிறிலங்கா வருவதைக் கைவிடாது விட்டால், எதிர்காலத்தில் நடைபெறும் தாக்குதல்களில் அவர்கள் பாதிக்கப்படலாம் எனவும் எச்சரிக்கை செய்துள்ளது.

இது குறித்து. கொழும்பிலுள்ள பி. பி. ஸி. மற்றும், யூ. என். ஐ. செய்தி ஸ்தாபனங்களுக்கு அறிவித்துள்ள எல்லாளன் படை, சிறிலங்காவின் உல்லாசப்பயணத்துறையையும், வெளிநாட்டு முதலீட்டு நிலைகளையும் தாக்கப் போவதாக அறிவித்துள்ளதாக பி. பி. ஸி. நேற்றிரவு அறிவித்தது.

இதேவேளை, இது குறித்து செய்தி வெளியிட்ட வெரித்தாஸ் வானொலி இம்முறை வெளிநாட்டவர் எவரும் உயிரிழக்கக் கூடாது என்ற வகையிலேயே வெடிகுண்டுத் தாக்குதலை நடத்தியதாகவும், இதன் பின்னரும் வெளிநாட்டவர் சிறிலங்கா வருவதை கைவிடாவிட்டால் அடுத்த தடவை வெடிக்கும் குண்டுகளால் வெளிநாட்டவரும் உயிரிழக்கலாம் எனவும் எச்சரிக்கை செய்ததாகத் தெரி

(6ஆம் பக்கம் பார்க்க)

## எல்லாளன் படையின் எச்சரிக்கை ஈழப் போரில் புதிய திருப்பம்

(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரத்தை பாதிக்கவல்ல எல்லாளன் படையின் எச்சரிக்கை யானது உண்மையாயின் அது இனப்போரில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தக் கூடிய

இது குறித்து பி. பி. ஸி. மேலும் தெரிவிக்கையில்- இனப் போரை முடிவுக்கு கொண்டுவர எடுக்கும் முயற்சிகள் ஜனாதிபதி புலிகளுக்கு எதிராக எடுக்கும் முயற்

னால் தடைப்பட்டது போலுள்ள இவ் வேளையில் உல்லாசப் பயணிகளை இலங்கைக்கு வரவேண்டாம் என எச்சரிக்கை பிறப்பித்திருப்பதுகுறிப்பிடத்தக்கது என பி. பி. ஸி. செய்தியாளர் தெரிவித்தார்.

## வேறொருவரையும் கொல்லமுயற்சி

(கொழும்பு)

மாத்தளை மாநகரசபை உறுப்பினரை கொலைசெய்தபின்னர் கொலையாளிகள் மேற்படி உறுப்பினருடன் தொடர்புடைய ஐக்கிய தேசியக் கட்சி மாநகரசபை உறுப்பினர் றோகான் வீரக்கோன் வீட்டுக்கு இரவு சென்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் வேளை அவரது வீட்டில் பலர் இருந்தமையினால் கொலையாளி திரும்பிச் சென்றதாகவும் தனக்கு உயிராபத்து இருப்பதாக அவர் நேற்று ஏ- எப்- பி- நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்-

(6ஆம் பக்கம் பார்க்க)

## அன்னை பூபதி நினைவு உண்ணாவிரத நிகழ்வுகள்

தியாகச் சுடர் அன்னை பூபதியின் நினைவு நாட்களை முன்னிட்டு இன்று நடைபெற இருக்கும் உண்ணாவிரத நிகழ்வுகள் காலை ஏழு மணிக்கு ஈகச் சுடரேற்றலுடன் ஆரம்பமாகும். அதைத் தொடர்ந்து மலர்மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்படுவதுடன் மௌன வணக்கம் இடம் பெறும். உண்ணாவிரத

பத்து மணிவரை எழுச்சிப் பாடல்கள் ஒலிக்கச்செய்யப் படுவதுடன் கவிதை, கட்டுரை போன்றவையும் வாசிக்கப் படும். பத்து மணிக்கு நினைவுரையும் அதைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். பிற்பகல் இரண்டு மணிக்கு நினைவுரையும் அதைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் மற்றும் கவிதை கட்டுரை வாசிப்பு

இப்போது ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தக் கூடியதாகும்.

க்கு எதிராக எடுக்கும் முயற்சிக்கும் தடும் போக்குவரி

டத்தக்கது என பி. பி. ஸி. செய்தியாளர் தெரிவித்தார்.

மௌன வணக்கம் இடம் பெறும். உண்ணாவிரத ஆரம்ப உரையைத் தொடர்ந்து

நிகழ்ச்சிகளும் மற்றும் கவிதை கட்டுரை வாசிப்பு என்பன

(6ஆம் பக்கம் பார்க்க)

## அனுமதி பெறவேண்டும்

(யாழ்ப்பாணம்)

வவுனியா நகரில் உள்நுழைந்து தங்குவோர் உடனடியாக பொலிஸ் அனுமதிப்பத்திரம் பெறாவிடில் கைது செய்யப்படுகின்றனர். நகரில் உள்ள உறவினர் வீடுகளில் அனுமதிப்பத்திரம் பெறாமல் தங்குவோர் உறவினர்களுடன் சேர்த்து கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

வடபகுதியிலிருந்து தென்பகுதி நோக்கி அல்லது வவுனியா நகரம்நோக்கி பயணம் செய்வோர் வவுனியா நகரில் உள்ள பிறவுண் அன் கொம்பனியில் உள்நுழைவதற்கான அனுமதிப்பத்திரம் பெற்றே செல்லவேண்டும் என்றும் கொழும்பிலிருந்து புகையிரதத்தில் வருவோர் வவுனியா புகையிரதநிலையப் பகுதியில் உள்நுழைவதற்கான அனுமதிப்பத்திரத்தை பெறவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

உறவினர் வீடுகளில் தங்குவோர் ஒரு வாரத்திற்கான அனுமதியை பெறவேண்டும் என்றும் பாடசாலை அல்லது கோவில் சுந்தானந்த இந்து இளைஞர் மன்றம் போன்ற இடங்களில் தங்குவோர் ஒரு நாள் அனுமதியைப் பெறவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வவுனியா நகர வீதிகளிலும் சந்திகளிலும் பொலிசாரும் இராணுவத்தினரும் வீதிச் சோதனையில் ஈடுபட்டுள்ளனர். சந்தேகத்திற்குரியவர்கள் மறிக்கப்பட்டு சோதனையிடப்படுவதுடன் அவர்களின்

(6ஆம் பக்கம் பார்க்க)

# தாக்குதல் நடவடிக்கைக்கு மூன்று விசேட படையணிகள்

(கொழும்பு)

வடக்கு கிழக்குப் பகுதிகளில் இவ்வருட இறுதியில் கூட்டுப்படை நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக இராணுவ அதிகாரிகளை மேற்கோள்காட்டி கொழும்பு நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தப் படை நடவடிக்கைக்கு என வாகனங்களுடன் கூடிய மூன்று விசேட படையணிகள் உருவாக்கப்படவுள்ளதாகவும் யாழ். குடாநாடு, திருகோணமலை, ஆனையிறவு, மணலாறு பகுதிகள் தாக்குதல் நடவடிக்கைகளின் மையமாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. புதிய விசேட படையணிகள் அமைக்கப்படுவதால் இராணுவ கட்டமைப்பிலும் மாற்றங்கள் ஏற்படும்.

இந்த விசேட படையணிகளுக்கு புதிதாக கவசவாகனங்கள், கடற்படை கப்பல்கள், உலங்கு வானூர்திகள், நவீன ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. புதிதாக உருவாக்கப்படும் மூன்று படையணிகளில் இரண்டாவது படையணிக்கு கட்டளை அதிகாரியாக மேஜர் ஜெனரல் எம். எம். யூ. செனிவிரத்னவும் மூன்றாவது படையணிக்கு கட்டளை அதிகாரியாக மேஜர் ஜெனரல் வஜிர விஜேரத்னவும் நியமிக்கப்படவுள்ளதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 15 லட்சம் வாக்குகளால் தேர்தலில் வெல்வோம்

### டி. எம். ஜயரட்ண நம்பிக்கை

(கொழும்பு)

ஐ. தே. கட்சி அரசாங்கத்தினால் நடாத்தப்பட்ட தேர்தல்கள் எதுவும் நேர்மையாக நடாத்தப்படவில்லை. அதனாலேயே நாம் வெற்றிபெற முடியவில்லை. இவ்வாறு பொதுசன ஐக்கிய முன்னணியின் செயலாளரும், கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான டி. எம். ஜயரட்ண கூறியுள்ளார்.

கம்பளை நகரில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில் தென் மாகாண சபைக்காக இம்முறை தேர்தல் நடத்தப்பட்டபோதும் ஐ. தே. க. இத்தகைய வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டது. எனினும் நாம் அதற்கும் ஈடுகொடுத்துப் போட்டியிட்டோம். 1993-ல் தென்மாகாணசபைக்காக நடந்த தேர்தலின்போது பெற்றுக்கொள்ளப்பட்டதைவிடவும் இம்முறை

(6ஆம் பக்கம் பார்க்க)

# தாண்டிக்குளத்தில் இளவயதினர் 24 மணிநேரம் தடுத்துவைப்பு

(யாழ்ப்பாணம்)

வவுனியா தாண்டிக்குளம் இராணுவ தடைமுகாமைக் கடந்து தென்பகுதி நோக்கிச் செல்வோரில் பதினெட்டிற்கும் இருபத்தைந்துக்கும் இடைப்பட்ட வயதில் உள்ளவர்கள் 24 மணித்தியாலங்கள் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் தடுத்துவைக்கப்படுகின்றனர்.

ஆண், பெண் இருபாலாரும் தடுத்துவைக்கப்பட்டு பகலும் இரவும் விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

பலமணிநேர மிரட்டல், அதட்டலுக்குப்பின்னர் சந்தேகமற்றவர்கள் என கணிக்கப்படுவோர் மட்டும் தென்பகுதி நோக்கி அல்லது வவுனியா நகரப் பகுதி நோக்கிச் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

சந்தேகத்திற்குரிய இளைஞர்கள் அல்லது யுவதிகள் தொடர்ந்து தடுத்துவைக்கப்படுகின்றனர்.

சமீப நாட்களாக தாண்டிக்குளம் இராணுவ தடைமுகாம் பகுதியில் இது நடைபெற்று வருகின்றது.

வடபகுதியிலிருந்து மேற்படி தடைமுகாம் பகுதிக்குள் உள் நுழையும் இளைஞர்களையும், யுவதிகளையும் கண்காணித்துக் கொண்டிருக்கும் இராணுவ உளவாளிகள் திடீர் என்று குறிப்பிட்ட வயதினரை கையால் சைகை செய்து அழைக்கின்றனர். தனிமையான இடமொன்றில் அடைக்கின்றனர்.

இந்தச் சமயத்தில் அவர்களுடன் செல்லும் வயது முதிர்ந்த உறவினர்கள் இராணுவத்தினரால் விரட்டப்படுகின்றனர்.

புலனாய்வுப் பிரிவினரில் ஆண்களும் பெண்களும் சேர்ந்து விசாரணை நடத்துகின்றனர்.

வடபகுதியின் நிலை, போராளிகளின் நோக்கம், நடமாட்டம் ஆகியவை உளவாளிகளினால் கேட்கப்படுகின்றன. பகலும் இரவும் விசாரணை மேற்கொள்ளப்படும்போது சந்தேகத்திற்கிடமானவர்கள் கொடூரமாகத் தாக்கப்படுகின்றனர். பலமாக மிரட்டப்படுகின்

(6ஆம் பக்கம் பார்க்க)

## மாத்தளையில் பெரும் பதற்றம்

(கொழும்பு)

மாத்தளை மாநகரசபை உறுப்பினர் கொலை தொடர்பாக தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து மாத்தளை மாவட்டம் முழுவதும் கடைகள் மூடப்பட்டதுடன், நகரம் முழுவதும் பதற்றம் நிலவியது. இதனைத் தொடர்ந்து மாத்தளை பகுதி பொலிஸார் தீவிர சோதனைகளை மேற்

(6ஆம் பக்கம் பார்க்க)

# மாத்தளை மாநகரசபை ஐ. தே. க. உறுப்பினர் துப்பாக்கிச்சூட்டுக்கு பலி

(கொழும்பு)

மாத்தளை ஐக்கிய தேசியக் கட்சி மாநகர சபை உறுப்பினர் ஒருவர் இனந் தெரியாத இரு துப்பாக்கி நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்று முன்தினமிரவு ராஜிமான் உசேன் (43) என்ற இந்த ஐ. தே. க. மாநகர சபை உறுப்பினர் சுட்டுக் கொல்லப்பட்டார். மாத்தளை கொடேபொல வீதியில் இவரது வீட்டினருகே பதுங்கியிருந்த இரு நபர்கள் இவர்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு தப்பியோடிவிட்டனர்.

தீவிர ஐ. தே. க. ஆதரவாளரான உசேனின் தந்தையார் இரு தடவை மாத்தளை மேயராய் இருந்தவர் ஆவார்.

## கொலை தொடர்பாக இருவர் கைதாகினர்

(கொழும்பு)

மாத்தளை மாநகரசபை உறுப்பினர் கொலை தொடர்பாக ரஞ்சித் அழககோன் ஆதரவாளரான ஐக்கிய தேசிய கட்சி மாநகர சபை உறுப்பினரான எம். ஆர். ஹவுசதீனும் அவரின் மகனும் நேற்று முன்தினம் இரவு பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாத்தளை மாநகர சபை ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினரிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் காரணமாக மேற்படி மாநகர சபை மேயரும் மாத்தளை தேர்தல் தொகுதி அமைப்பாளருமான ரஞ்சித் அழககோனும் அவரின் ஆதரவாளரான ஆறு பேரும் தமது கட்சி உறுப்பினர் பதவிகளை இராஜினாமா செய்வதாக கட்சி பொதுச் செயலாளர் சிறிசேன குரேக்கு தெரிவித்துள்ளமை தெரிந்ததே.

ஆனால் இவ்வாறு இராஜினாமா செய்தவர்களில் ஒரு

(6ஆம் பக்கம் பார்க்க)

சாவகச்சேரி நகரசபை முன்னாள் விசேட ஆணையாளர்

உயர்திரு. த. நவரத்தினராசா

அவர்களுக்கு சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தகர் சங்கம் நடாத்தும்

# சேவை நலம் பாராட்டு விழா சிறப்பிதழ்

அருளொளிரும் மெய்யன்பர்களே

அன்புக்கும் மதிப்புக்குமுரிய திரு. த. நவரத்தினராசா சாவகச்சேரி நகரசபை ஆணையாளராகத் திறம்படப் பணி ஆற்றி ஓய்வு பெறுவதை அறிந்தோம். அறநெறியால் மக்களின் உளங்களைக் கவர்ந்த பெருமகனார். அசைக்கமுடியாத இறைபக்தி, ஆடம்பரமில்லா வாழ்க்கை பரோபகார சிந்தனை ஆதிய நற்பண்புகளைக் கடைப்பிடித்தொழுகுபவர். இவர் யோக்கோர் ஆயிரத்தில் ஒருவரே. சிலரால் பதவிக்குப் பெருமை பதவியால் சிலருக்குப் பெருமை இவ் இரு வகைகளாலும் புகழ் ஈட்டியவர் இவர். ஓர் தகுதி வாய்ந்த பெரியாரைப் பாராட்டி அவரை மகிழ்விப்பது அவர் வாழ்நாளிலேயே ஆற்றவேண்டியதொன்று. அது கண்டு நாமும் பெருமன நிறைவெய்துகிறோம்.

அவர் சகல சௌபாக்கியங்களையும் பெற்று நலமே நீடுவாழ வேண்டுமென இறையருளை உளமார வேண்டி அவரை மனமார ஆசீர்வதிக்கின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

ஸ்ரீலஸ்ரீ குருமஹாசந்நிதானம்

---

மக்கள் சேவையே மகேசன் சேவையென தம் வாழ்நாளை சமூகத் தொண்டிலேயே கழிக்கும் பெருந்தகைகள் மனிதருள் மாணிக்கமாக மதிக்கப்படுகின்றார்கள். அவ்வாறான ஒரு சிலருள் சாவகச்சேரி நகரசபை விசேட ஆணையாளராக பணியாற்றி அண்மையில் இளைப்பாறிய திருமிகு தலையசிங்கம் நவரத்தினராசா அவர்களும் ஒருவராவார். 'செய்வது நான் இல்லை' என்று கீதையில் கூறப்பட்டதற்கு இணங்கவும், 'கடமையைச் செய் பலனை எதிர்பாராதே' என்ற முதுமொழிக்கிணங்கவும் சேவை செய்து வாழ்ந்து காட்டிய பெருமைக்குரியவர்.

இவர் இம்மண்ணின், தென்மராட்சி மண்ணின் மைந்தர், சொத்து. இதனை நினைவிற் கொள்ளும் வகையில் குறிப்பாக சாவகச்சேரி நகரசபைப் பிரதேசத்திலுள்ள மக்களின் தேவையுணர்ந்து தன் சேவையைச் செய்துள்ளார். அன்னாரின் காலத்தில் நிறுவப்பட்ட நவீன சந்தைக் கட்டடம், கனிவளர்ச்சிக்கான நூலகம், நுணாவில், மீசாலை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள பிராந்திய நூலகங்கள் சான்று பகரும்.

இவர் நகரசபை ஆணையாளர் மட்டுமன்றி அரசசார்பற்ற அனைத்து தொண்டர் நிறுவனங்களிலும் ஏதோ ஒரு வகையில் இணைந்து தொண்டாற்றி வருவது அவர் தம் தொண்டின் சிறப்பே. அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பது ஆன்றோர் வாக்கு. எனினும் அன்னார் அணியும் தூய வெண்ணிற ஆடை அவரின் தூய உள்ளத்தின் பிரதிபலிப்பு.

எனவே அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றாலும், அவர்தம் சமூகப் பணியில் ஓய்வு பெறமாட்டார். இப்பணி தொடர நோயற்ற வாழ்வும், நீண்ட ஆயுளும் கிடைக்க எல்லாம் வல்ல இறையருளை வேண்டி நிற்கின்றேன்.

பு. சுந்தரம்பிள்ளை
பிரதேச செயலர்,
தென்மராட்சி.

---

## வாழிய பல்லாண்டே!

உத்தம வெங்கலி ஊர்மனை வாழ

## ஆசியுரை

சாவகச்சேரி நகரசபையின் செயலாளராக நீண்டகாலம் கடமையாற்றிய திரு. த. நவரத்தினராசா அவர்களுக்கு சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தக சங்கம் பாராட்டு விழா எடுப்பதையிட்டும், அதற்காக சிறப்பு மலரை வெளியிடுவதையிட்டும் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

பொதுச் சேவையில் செயலாற்றும் ஊழியர் பொதுவாக தமது கடமையை ஓர் சேவையென்று கருதாது அது தங்களுக்கு ஊதியம் தரும் தொழில் என்ற அடிப்படையிலேயே கடமையாற்றுவது தற்பொழுது அதிகரித்து வருவதை நாம் காணக்கூடியதாகவுள்ளது. அத்துடன் குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஆரம்பித்த அசாதாரண சூழ்நிலை காரணமாக இம்மனப்போக்கு மிகவும் கூர்மையடைந்து வருவதையும், அதன் மூலம் பொதுச் சேவை ஊழியர்கள் மக்களிடையே, மற்றைய நிறுவனங்களிடையே கடுமையாக விமர்சிக்கப்படும் சந்தர்ப்பங்கள் தற்பொழுது காணக்கூடியதாகவுள்ளது.

இச் சூழ்நிலையில் பொதுச் சேவையிலுள்ள ஓர் நிர்வாகி தான் செய்த சேவைக்காக அப்பிரதேச மக்களின், அப்பிரதேச வர்த்தக கைத்தொழில், மற்றும் நிறுவனங்களின் பாராட்டைப் பெறுவதும், அப்பாராட்டை ஒரு பொது விழாவாக எடுத்துக் கொண்டாடும் இவ்விழாவிற்கு நாயகராகவுள்ள இந் நிர்வாகியினுடைய சேவையையும், ஆளுமையையும் மக்கள் பால் அவர் கொண்டிருக்கும் நன்மதிப்பையும் எடுத்துக்காட்டுவதாக அமைகிறது. அவ்வாறு பெருமையுடைய திரு. த. நவரத்தினராசா அவர்களுக்கு எடுக்கும் விழா சிறப்புற அவர் நீடூழி காலம் வாழ வேண்டுமென வாழ்



விழா சிறப்புற

மனதார

வாழ்த்துவோர்

## ஆசியுரை

தற்காலிக எழுதுநராக உள்ளூராட்சிச் சேவையில் சேர்ந்த திரு. த. நவரத்தினராசா அவர்கள் படிப்படியாகப் பதவியுயர்வு பெற்று, இலங்கை நிர்வாக சேவையில் சேர்ந்தமை அவரது திறமையினதும், முயற்சியினதும் வெளிப்பாடே.

உள்ளூராட்சி பற்றிய அறிவை மேம்படுத்தவும் தமது சேவையைத் தொடரவும், உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கம் அவருக்கு ஓர் ஊன்றுகோலாயிற்று. பெரும்பாலும் உள்ளூராட்சிச் சேவையில் பிரபல்யம் பெற்று விளங்குபவர்கள் ஏதோ ஒரு காலத்தில் யாழ்ப்பாண மாநகர சபையில் கடமையாற்றியவர்களே என்ற நிலையில் இவ்வாசியுரையை வழங்குவதில் எனது மகிழ்ச்சி இரட்டிப்பாகின்றது.

செய்யும் தொழிலை தெய்வமாக மதித்து தனது சொந்த நகரில் நீண்டகாலம் நிறைவேற்று உத்தியோகத்தராகக் கடமையாற்றிய காரணத்தினால் அவ்வூர் மக்களின் நன்மதிப்பையும், ஒத்துழைப்பையும் பெற்றதுடன் சாவகச்சேரி நகரசபையை ஒரு முன்னுதாரண சபையாகத் திகழ வைத்த பெருமையும் அவரையே சாரும்.

சேவையிலிருந்து இளைப்பாறிய போதிலும் அவரது தொண்டு சகல வழிகளிலும் அந்தந்த மக்களுக்குக் கிடைக்கும் விதத்தில் இவர் தேகாரோக்கியத்துடன் நீண்டகாலம் வாழ இறைவனின் நல்லாசியை வேண்டுகின்றேன்.

"உள்ளத்தால் பொய்யாது ஒழுகின்
உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம்
உளன்"

யாழ்ப்பாணத்திற்கு அடுத்தபடியாக முதன்மை பெறும் சாவகச்சேரி நகரத்திற்கு ஆக்கபூர்வமான பல திட்டங்களை வகுத்து செயற்பட வேண்டிய காலகட்டத்தில் வாழ்கின்றோம். நிதியைப்பொறுத்தவரை திரு. நவரத்தினராசா அவர்கள் அக்கறை கொண்டு நிதி வளத்தை நிறைவுறும் படி செயற்பட்டார். அவர் விட்டுச் செல்லும் நினைவோடு நிதியும் அவரை நினைவுகூர வைக்கின்றது. சொந்த ஊரில் பணி புரிவது என்பது எத்தகைய உயர்வையும் ஊக்கத்தையும் தரவல்லது என்பதை திரு. நவரத்தினராசாவின் கடமை உணர்வு தெளிவு படுத்துகின்றது. இது எனது மண், இம்மண்ணை வளம்படுத்தி இம் மக்களை வாழ்விக்க வேண்டுமென்ற உணர்வு இவரது உத்தியோகத்தைக் காட்டிவிட்டது. இவ்வுணர்வால் இவர் நன்கு செயற்பட்டு மக்கள் மத்தியில் நல் மதிப்பையும் கணிப்பையும் பெற்றார். வாழ்க வளமுடன் ஆண்டுகள் நூறென நானும் இணைந்து வாழ்த்துகின்றேன்.

க. இ. ஜெயக்குமார்
தலைவர்
கைத்தொழில் வர்த்தக சங்கம்
சாவகச்சேரி.

---

## அகவை அறுபதில் நவரத்தினராசா

சா/கைத்தொழில் வர்த்தகர் சங்கம், சாவகச்சேரி நகரசபையில் ஆண்டுகள் 26, உள்ளூராட்சி உத்தியோகத்தராகப் பல நிலைகளில் கடமையாற்றி சேவையிலிருந்து இளைப்பாறும் திருமிகு தலையசிங்கம் நவரத்தினராசாவின் சேவையைப் பாராட்டி இன்று விழா எடுப்பதில் மகிழ்ச்சி அடைவதோடு கடப்பாடுமுடையது. அன்னாரின் சேவையைப்பெற்ற வர்த்தகப் பெருமக்கள் நன்றியுடன் செலுத்தும் நல் விழாவிது.

சாவகச்சேரி நகரின் கண்ணே, நிமிர்ந்து நிற்கும் நவீன அங்காடி நிலையமும், நகரசபை வளாகத்தினுள் அமைந்திருக்கும் நூல் நிலையமும் அன்னாரின் அரும் பணியை என்றும் மக்கள் மனதிருத்தும்.

"உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு"

என்பது வள்ளுவர் வாக்கு. இதற்கேற்ப அவர் தம் தலைமையிலும், கடமையிலும், சமூகத் தொண்டிலும், சமயத் தொண்டிலும் ஈடுபட்டு உறுபசியில்லாமலும், பிணியில்லாமலும், பகைமையில்லாத மக்கட் சமுதாயத்தை தன் ஆத்ம திருப்தியோடு, தன் ஆளுமைக்குள் உருவாக்கிக் கண்டவர் என்றால் மிகையாகாது.

அன்னாரின் ஓய்வுக் காலத்திலும், அவர் தம்பணி சிறக்க நல்லாரோக்கியத்தையும், சகல சௌபாக்கியங்களையும் கொடுக்க எல்லாம் வல்ல இறை அருள் கிட்டுமாக.

தொடர்க அவர் தம் பணி

சங்கத்தின் சேவையிலுள்ள,
த. சண்முகநாயகம்
செயலாளர்
சா/கைத்தொழில் வர்த்தகர் சங்கம்.

---

## சேவைக்குச் சாட்சிகள்

தற்காலிக லிகிதராக உள்ளூராட்சிச் சேவையில் உட்புகுந்து படிப்படியாக உயர்ந்து அகில இலங்கை நிர்வாக சேவை

உத்தம னெங்கள் ஊர்மனை வாழ
உருப்பணி யாற்றிய வன்
சத்தென நின்று சாவை நகரின்
சரித்திர மெழுதிய வன்
கொத்தல், வெட்டல் கொடுமைக
ளென்னும்
குறையறி யாமே லோன்
நித்தமும் தூய்மை நெஞ்சினில் நேர்மை
நிறைதரு முயர்வா னவன்!
ஃ ஃ ஃ
ஏழைகள் வாழ்வின் இன்னலை நீக்கி
எளிமையைத் தனதாக்கி
நாளைய நாடு நலமென நிமிர
நலமுறு பணியாற்றி
கோழைக ளாட்சிக் கொடுமைக ளூடே
கொள்கைகள் பிறளா மல்
வேளையி லோடி வேதனை தீர்த்து
வெற்றியை யாக்கிய வன்!
ஃ ஃ ஃ
நவரத் தினரா சாபுகழ் வாழி
நன்மைக ளுறவாழி!
தவமுயர் செல்வம் சீர்த்திகள் கொண்டு
பலருடன் நனிவாழி!
தவமுறை மனையாள் தனயர்க ளோடே
தரணியிற் சுகவாழ்வு
உவந்துற மேனோ னுயரினி யின்னும்
வாழிய பல்லாண்டே!

சாவகச்சேரி த. நாகேஸ்வரன்

வாழ வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

நன்றி
செ. பத்மநாதன்
யாழ். மாவட்டத் திட்டப்பணிப்பாளர்

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்.
யாழ்ப்பாணம்.

உயர்ந்து அகில இலங்கை நிர்வாக சேவையிலிருந்து திரு. த. நவரத்தினராசா ஓய்வு பெற்றுள்ளார் என்றால், அது அவரது கடமை ஆர்வத்திற்குச் சாட்சி. நகர மக்களுக்கு அவர் ஆற்றிய சேவைகளுக்கு சாவகச்சேரி நவீன சந்தையும், நூலகமும், விளையாட்டு மைதானமும் சாட்சிகள். சமயத்தின் வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய சேவைகளுக்கு, விருமர்கோவில் சுற்றாடலை வெளியாக்கி, மக்கள் சென்று வழிபட அமைத்துக் கொடுத்த பாதை சாட்சி. கல்வியின் வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய சேவைகளுக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் அங்கீகரிக்கப்பட்டுள்ள வர்த்தக, விஞ்ஞான பாடநெறிகள் சாட்சி. இயற்கை வளத்திற்கும், நகர அழகிற்கும் அவர் ஆற்றிய சேவைகளுக்கு இன்னும் சில காலத்தில் வளர்ந்து நிழல் தரப்போகும் அவர் நாட்டிய மரங்கள் சாட்சி. அவரின் கீழ் பணிபுரிந்த உத்தியோகத்தர்களின் முன்னேற்றத்திற்கு அவர் ஆற்றிய சேவைகளுக்கு நான் சாட்சி. இத்தகைய சமூகத் தொண்டருக்கு சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தக சங்கம் எடுக்கும் விழாவைப் பாராட்டி திரு. நவரத்தினராசாவும் குடும்பமும் "வாழி நலஞ் சூழ" என்றே வாழ்த்துகின்றேன் "வாழ்க"

சி. நடராசா
செயலாளர்
நகரசபை, சாவகச்சேரி


## எழுகதிர்
விற்பனை நிலையம்
(சண்றைஸ்)
கச்சாய் வீதி, சாவகச்சேரி

## விக்கினேஸ்வரா
களஞ்சியம்
கண்டி வீதி, சாவகச்சேரி.

(சி-9180)



வரி
விளம்பரம்

**யாழ். ஸ்ரீதர் திரையில்**
தினசரி 2-30, 6-00 சனி, ஞாயிறு 10-30, 6-00 மதுரை வீரன்: சனி, ஞாயிறு 2-30 ஒளிவீச்சு. (சி-9164)

காவேரி
**சீயாக்காய்ப் பவுடர்**
ஷாம்போவைப்போலல்லாது பன்மடங்கு பலனைத் தருவது காவேரி சீயாக்காய்ப் பவுடர். சீயாக்காய்ப் பவுடர் என்று கேட்காமல் காவேரி சீயாக்காய் பவுடர் என்று கேட்டு வாங்குங்கள். கந்தசாமி அன் சன்ஸ். (7900)


# நினைவு கூருகின்றோம்...
## 1994-04-17

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய-
⊛ சின்னத்தம்பி கிருஷ்ணபிள்ளை (மட்டு)

1986ஆம் ஆண்டு யாழ் - நாவற்குழியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-
லெப். ஜெரி (சுப்பிரமணியம் போகராசா- கிராம்புவில் - சாவகச்சேரி)

1988ஆம் ஆண்டு செட்டிப்பாளையத்தில் தேசவிரோதிகளினால் கைது செய்யப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டு எமைப்பிரிந்த-
குருவி (தம்பிராசா இராஜேஸ்வரன் - மட்டு)

வல்வெட்டித்துறையில் இந்தியப்படையினரால் கைது செய்யப்படும் பொழுது தப்பிச் செல்கையில் சுட்டுக்கொல்லப்பட்டு எமைப்பிரிந்த-
கப்டன் டேவிட் (சந்தசாமித்துரை சிவகுமார்- கடற்கரைவீதி-பருத்தித்துறை)

யாழ் - கல்வியங்காட்டில் இந்தியப்படையினருடனான சமரின் போது விழுப்புண்ணடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-
கெனடி (சிவநாதன் வாமதேவன் - கச்சேரி ஒழுங்கை, அரியாலை - யாழ்)

இதே ஆண்டு தேசவிரோதசக்திகளினால் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-
⊛ செல்லத்துரை சத்தியநாதன் (காரைதீவு - அம்பாறை)

திருமலை - கட்டைபறிச்சான் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப்பிரிந்த-
⊛ ஜெகன் (கிருஷ்ணபிள்ளை ஜெயராசா - திருமலை)

1989ஆம் ஆண்டு இந்தியப்படையினரால் முகாமில் வைத்து அடித்துக் கொலை செய்யப்பட்ட,
ரஞ்சித் (பொன்னுச்சாமி வெலிவரன் - குமரக்கோட்டம் - கோண்டாவில்)

1991ஆம் ஆண்டு மன்னார் - அடம்பன், ஆட்காட்டிவெளிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-
நாயகன் (முருகையா வசந்தகுமார் - வவுனியா)
ஜீவா (நாதன் சிவலோகநாதன் - மிருசுவில்வடக்கு - கொடிகாமம் - யாழ்)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

⊛ இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**
(சி-9170)

# அரசின் தாளத்திற்கேற்ப நாம் ஆடமாட்டோம்

## - தென் மாகாண முதல்வர்

(கொழும்பு)
மத்திய அரசின் தாளத்திற்கு ஏற்ப ஆடுவதற்கு நாம் தயாராக இல்லை. எமது மக்கள் எம்மிடமிருந்து என்ன சேவைகளை எதிர்பார்க்கின்றார்களோ அவற்றை நாம் செய்வோம் என்று தென்மாகாண முதலமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்துள்ளார்.

காலி நகரில் விவசாய நீர்ப்பாசன கடற்றொழில் உள்ளூராட்சி மன்ற அமைச்சு அலுவலகத்தை திறந்து வைத்த பின்னர் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில், தென் மாகாண சபை பரிபாலனத்தை ஏனைய மாகாண சபைகளுக்கு முன்மாதிரியாக அமைப்பதே எமது குறிக்கோளாகும். அங்கு கடமையாற்றும் அதிகாரிகளின் அரசியல் எண்ணங்கள் எவ்வாறு இருப்பினும் அதைப்பற்றிய கவலை எமக்கு இல்லை. ஆனால் தமது கடமைகளை ஒழுங்குபடி செய்யாது மக்கள் சேவைக்காக தம்மை அர்ப்பணிக்க வேண்டும். அது நீதியாகவும், நேர்மையாகவும் இடம்பெற வேண்டும் என்பதே எமது விருப்பம் எனவும் தெரிவித்தார்.

# வருடாந்தம் 30லட்சம் பேர் மலேரியாவினால் உயிரிழப்பு

(கொழும்பு)
உலகில் வருடாந்தம் மூன்று கோடிக்கும் ஐந்து கோடிக்கும் இடையிலான மக்கள் மலேரியா நோயினால் பாதிக்கப்படுவதாகவும் இதில் சுமார் முப்பது லட்சம் பேர் மரணம் அடைவதாகவும் உலக மலேரியா தடுப்பு இயக்கம் வெளியிட்டுள்ள தகவல் மூலம் தெரியவந்துள்ளது.

வியட்னாம் நாட்டிலே மலேரியாவினால் பாதிக்கப்படுபவர் தொகை வருடாந்தம் அதிகரித்து வருவதாகவும் தெரிவித்துள்ள அத்தாபனம் இதற்கு சீனாவில் காணப்படும் 'காட்டி' என்ற மூலிகை மூலம் குணப்படுத்த முடியும் என்றும் இது தற்போது பயன்படுத்தும் மருந்தை விட மூன்றுமடங்கு குணப்படுத்தக் கூடியது என ஆய்வாளர் கருதுவதாகவும் தெரிவித்துள்ளது.

# பாதிப்புறும் தொண்டருக்கு பணஉதவி செய்ய வேண்டும்

## -செஞ்சிலுவை தொண்டர்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
தொண்டர் சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது காயமடைவோர் மற்றும் மரணமடைவோரின் குடும்பங்களுக்கு மனிதாபிமான ரீதியில் பணஉதவி வழங்கப்பட வேண்டும் என்று இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையை சேர்ந்த தொண்டர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாதாந்தகிளைக்குழுக்கூட்டம் அண்மையில் நடைபெற்ற போது அதில் கலந்துகொண்டவர்கள் இது பற்றி மேலும் கூறுகையில் சேவையில் ஈடுபடும்போது காயமடையும் அல்லது மரணமடையும் தொண்டர்களின் குடும்பத்தினருக்கு பணஉதவி செய்வதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென்றும் வலியுறுத்தியுள்ளனர்.

## கட்டாக்காலிகளால் தொல்லை

(யாழ்ப்பாணம்)
அரியாலை சாம்சன் குடியிருப்பில் வசிக்கும் மக்களால் செய்கை பண்ணப்படும் வீட்டுத்தோட்டங்களில் நுழைந்து பயிர்களைப் பாழாக்கி வரும் கட்டாக்காலி ஆடு, மாடுகளின் தொல்லையால் தோட்டங்களின் உரிமையாளர்களும் குடியிருப்பு நிர்வாகத்தினரும் கவலையடைந்துள்ளனர் எனத் தெரிகின்றது. (22)

## மன்னாருக்கு மின் விநியோகம் நிறுத்தம்

மன்னார் நகருக்கு ஜெனரேட்டர் மூலம் வழங்கப்பட்டு வந்த மின்சார விநியோகம் திடீரென நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் நகரப்பகுதி இருளில் மூழ்கி இருப்பதுடன் இப்பகுதிக்கான குடிநீர் விநியோகமும் பாதிக்கப்படலாமென கூறப்படுகிறது.

---

ஏப்ரல் 23 யாழ்ஒலிசை மன்றத்தினர் வழங்கும் ஏப்ரல் 24

மாபெரும் இசை நிகழ்வு

செந்தமிழ் பாட்டு II

விரைவில் எதிர்பாருங்கள்

(சி-9175)

## முக்கிய அறிவித்தல்
### தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் யாழ் மாவட்டம்

அன்னை பூபதி நினைவுநாள் விழாவை தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் 18-04-94 பிற்பகல் 5.30 மணிக்கு நல்லூர் வீதி முன்றலில் நடாத்தவிருப்பதாலும் 19-04-94 நினைவு நாள் இறுதி நாளானபடியாலும் சகல தனியார் கல்வி நிறுவனங்களையும் 18-04-94 திங்கள், 19-04-94 செவ்வாய் ஆகிய இரு நாட்களும் மூடி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

பொதுச் செயலாளர்
யாழ் மாவட்டம்

(சி-9179)

---

யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபை

## பணிப்பாளர்சபைக்கூட்டம் 18.04.1994

1994-04-17 ஆம்திகதி யாழ். மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் பணிப்பாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருப்பதனால் எமது பணிப்பாளர் சபைக் கூட்டம் பின் போடப்பட்டுள்ளது.

எதிர்வரும் 18-04-1994 திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு அதே நிகழ்ச்சி நிரலுடன் நடைபெறும் என்பதனை சகல பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கும் அறியத்தருகின்றேன். தயவு செய்து தவறாது கூட்டத்துக்கு சமுகமளிக்கவும்.

பதில் செயலாளர்.
யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை.

(சி-9176)

---

## அறிவித்தல்

### தியாகச்சுடர் அன்னை பூபதி அம்மாவுக்கு அடையாள உண்ணாவிரதம்

காலம்:- 18-04-1994
நேரம்:- காலை 8 மணி
இடம்: யாழ். கன்னாதிட்டி காளிகோவில் முன்பாக

அனைத்து வடபிராந்திய யாழ். ஆங்கில மருந்து வணிகர் மன்ற நிர்வாக, பொதுச்சபை உறுப்பினர்கள் தவறாது வந்து அன்றைய உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மு. பத்மநாதன் (செயலாளர்)
வ. யாழ். ஆ. ம. வ. கழகம்

(சி-9178)

---

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு:
1970 - 03 - 23

வீரச்சாவு:
1991 - 04 - 17

### வீரவேங்கை ஜீவா
(நா. சிவயோகநாதன்)
(யா/உ/இராமநாதன் ம/வி சிரேஷ்ட மாணவ தலைவன்)

சாயும் பொழுது 'செல்வா' உன் பேர் கேட்டு
திகைத்து நின்றநடா
பேயும், சிங்கள, படையினரும் 'ஜீவா' உன் அதிரடியில்
மடிந்து போனாரடா
பாயும் புலியாகி காரைநகரினிலே காவிய நாயகனாய்
மாறியே போனாயடா
நீயும் தோழர்களும் போன பாதையில்
விரைவாய் நாமும் வருவோமடா,

மிருசுவில் வடக்கு.
மிருசுவில்.
(8050)
என்றும் மறவாத
குடும்பத்தினர்.

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
16. 10. 1923

மறைவு:
28. 4. 1993


அமரர்
### வேலுப்பிள்ளை பாலசிங்கம்
(ஓய்வு பெற்ற அரச எழுதுவினைஞர்)
திதி: 17.4.94

குடும்பத்தின் ஒளிவிளக்கே பண்பின் இருப்பிடமே
பாசத்தின் உறைவிடமே அன்பாய் வளர்த்து விட்டு
அதிவிரைவாய் சென்றதேனோ? வாழ வழிகாட்டி எம்மை

வையகத்தில் இருத்திவிட்டு
விண்ணகம் நோக்கி - நீங்கள்
விரைந்தது ஏன் அப்பா!
அழியாத நெஞ்சுடனும் அன்பு மொழியுடனும

---

## அறிவித்தல்





நாடக ரசிகப் பெருமக்களே! கடந்த 14-04-94 அன்று மேடை யேற்றப்படவிருந்து மழை காரணமாக பின்போடப்பட்ட மூத்ததம்பி தேவதாசனின்

# “பூதத்தம்பி”

யாழ்ப்பாண வரலாற்று இசை நாடகம் மீண்டும் 20-04-94 அன்று புதன்கிழமை அதே சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் மேடையேற்றப்பட உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

- கண்ணைக் கவரும் அரங்கம்
- காட்சிக்கு காட்சி புதுமை
- காதுக்கினிய இசை
- கண்ணீர் மல்க வைக்கும் கதை

ஈழப் பெண் ஒருத்தியின் சுடு இணையற்ற துணிவை எடுத்தியம்பி இதயத்தை நெகிழவைக்கும் இந்தச் சோக காவியத்தை, சங்கானை வட்டக் கலை பண்பாட்டுக் கழகமும், காரைநகர் விக்காவில் கலைஞர்களும் இணைந்து மேடையேற்றுகின்றார்கள்.

அனைவரும் திரண்டு வந்து ஆதரவு தாருங்கள்

**அன்பளிப்பு ரூபா10-00 மட்டுமே**

சங்கானை வட்டக் கலை பண்பாட்டுக் கழகம்,
காரைநகர் விக்காவில் கலைஞர்கள்,

(8064)

---

## 6ஆம் ஆண்டு
## அன்னை பூபதி நினைவு நாள்

இடம்: நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில்

காலம்: 18.4.94 திங்கள் மாலை 5.30 மணி

### நிகழ்ச்சி நிரல்

1. மௌன அஞ்சலி
2. தமிழ்த்தாய் வணக்கம்
3. தலைவர் உரை
4. விடுதலைப்புலிகள் முக்கிய பிரமுகர்கள்உரை
5. இன்னிசை
6. நடனம்
7. பட்டி மண்டபம்

தமிழீழம் மீதான பிரதான ஆக்கிரமிப்பாளர்கள் இந்தியாவா? இலங்கையா?

நடுவர்:- திரு. அ. குமாரவேல்

| இந்தியா | இலங்கை |
|---|---|
| திரு. வரதராஜன் | திரு. இரா. செல்வவடிவேல் |
| திரு. கணேசலிங்கம் | திரு. காரை செழியன் |
| திரு. மகேந்திரம் | திரு. சிறீதரன் |

8. நன்றியுரை

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ் மாவட்டம்

(இ-9178)

---

## கண்ணீர் அஞ்சலி
## அமரர் செல்வி நாகலிங்கம் - இந்துமதி

பிரதேச செயலரும், விசேட ஆணையாளரும்
கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி;

எம்மைவிட்டு உயிர் நீத்த
அன்னாரின் ஆத்ம சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச்சங்கம்
கரைச்சி பிரதேச சபை,
கிளிநொச்சி;

(8063)

---

அன்போடு நேசத்துடனும் அன்பு மொழியுடனும் மகிழ்ச்சிப் புகழுடனும் மனைவி, மக்கள், மருமகர், பேரருடன்

மகிழ்ந்திருந்த நாள்கள் - எல்லாம்
மறைந்ததே ஓராண்டாய் - அப்பா
ஒன்றென்ன ஓராயிரம் ஆண்டு சென்றாலும்
அகலாது உங்கள் நினைவு எம் நெஞ்சை விட்டு

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகிறோம்.

தெய்வவாசா, கரவெட்டி மத்தி, கரவெட்டி.
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(7939)

---

## 31ம் நாள் நினைவஞ்சலியும்
## அந்தியஷ்டி அழைப்பும்



தோற்றம்
28 - 03 - 1948

மறைவு
18 - 03 - 1994

அமரர் உயர்திரு
### மாப்பாணபிள்ளை நித்தியானந்தசிவம்
(இ. போ. ச. உத்தியோகத்தர்)

1994 - 04 - 17-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8-00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அந்தியஷ்டிக் கிரிகையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

பெரியதோட்டம், கரவெட்டி மத்தி, கரவெட்டி.
அன்பு மனைவி, மகன், தாய், மாமன், உறவினர்கள்.

(8065)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

## அன்னைபூபதி நினைவாக அடையாள உண்ணாவிரதம்

தியாகச்சுடர் அன்னை பூபதியின் நினைவாக யாழ் வணிகர் கழகத்தின் ஏற்பாட்டில் நாளை கன்னாதிட்டி காளிகோவில் முன்பாக அமைந்துள்ள அன்னை பூபதிநினைவுப் பந்தலில் அடையாள உண்ணாவிரதம் நடைபெறவுள்ளது.

வணிகர் கழகப்பணிமனை அலுவலகத்திலிருந்து காலை எட்டு மணியளவில் ஊர்வலம் புறப்பட்டு லெப். கேணல் சந்தோசம் வீதி வழியாக கன்னாதிட்டி காளிகோவில் முன்றலை அடைந்து அங்கு அடையாள உண்ணாவிரதம் ஆரம்பமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## பழசெய்கையை ஊக்குவிக்க பொரு. நிறுவனம் ஏற்பாடு

மனிதனுடைய ஆரோக்கியமான வாழ்விற்கு தினமும் உணவில் பழவகை சேர்த்துக் கொள்ளப்பட வேண்டியது அவசியமானதாகும். வன்னிப் பிரதேசத்தில் நீர்வளம், நிலவளம் என்பன இருந்தும் போதியளவு பழமரச்செய்கை செய்யப்படாமல் இருந்தது. இதனைத் தவிர்த்து இங்கு பழமரச் செய்கைகளை ஊக்குவிக்குமுகமாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன விவசாயப் பகுதியினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். அதற்கு முன்னோடி நடவடிக்கையாக கிளிநொச்சிக் கோட்ட வட்டக்கச்சி பகுதியில் 300க்கு மேற்பட்ட பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு பழமரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

வழங்கப்பட்ட பழமரக் கன்றுகளில் 635 மாங்கன்றுகள், 353 தேசிக்கன்றுகள், 308 பலாக்கன்றுகள், 128 மாதுளங்கன்றுகள், 75 கொய்யாக்கன்றுகள் என்பன அடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விளக்க கூட்டங்கள்

இரட்டைக் கூட்டுப்பு பாவனையால் உள்ள நன்மைகளையும், இலாபத்தன்மைகளையும் வன்னி மாவட்டத்தில் உள்ள மக்களுக்கு தெரியப்படுத்தும் நோக்கில் வன்னிப்பகுதியில் கிராமிய உற்பத்திக் குழுக்களூடாக பல்வேறு இடங்களில் விளக்கக் கூட்டங்கள் கடந்த மாத முற்பகுதியில் நடாத்தப்பட்டன.

இவ்விளக்கக் கூட்டங்கள் வவுனியாக் கோட்டத்தில் சேமமடு, ஓமந்தை இரணை இலுப்பைக்குளம், பூவரசங்குளம், வவுனியா, கனகராயன்குளம், நயினாமடு ஆகிய இடங்களில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## இன்றைய நிகழ்வுகள்

காரைநகர் வாரிவளவு நல்லியக்கச் சபையினர் தமிழ் புதுவருடத்தை முன்னிட்டு ஆண்டுதோறும் எடுக்கும் கலை நிகழ்ச்சிகளும், பல்கலைக்கழக அனுமதி பெறும் மாணவர்களுக்கு பாராட்டு வைபவமும் இன்று காலை ஒன்பது மணிமுதல் நல்லை ஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஃ ஃ

புங்குடுதீவு அ. மி. வித்தியாலயத்தில் தொடர்ச்சியாக 35 வருடங்கள் ஆரம்பக்கல்வி ஆசிரியையாக கடமையாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் திருமதி அ. சேனாதிராசா அவர்களின் சேவை நலம் பாராட்டு விழா இன்று பிற்பகலில் கிளனர் ஒழுங்கையிலுள்ள பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

### சேவைநலம்பாராட்டு விழா

புங்குடுதீவு மேற்கு அ. மி. வித்தியாலய இளைப்பாறிய ஆசிரியை திருமதி அ. சேனாதிராசா அவர்களுக்கு பெற்றோர்களும் மாணவர்களும் மேற்கொள்ளும் பாராட்டுவிழா, யாழ் கிளனர் ஒழுங்கையில் உள்ள பாடசாலை மண்டபத்தில் இன்று (17-4-94) ஞாயிறு பி.ப. 3 மணிக்கு நடைபெறும். ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சபையும்,
பழைய மாணவர் சங்கமும்

(8055)

உங்கள் ஆடைத் தேவைகளை
விரைவாகப் பூர்த்தி செய்ய

புதிதாக அமைகிறாள்

### யோகாமணி ஆடை அகம்

(யோகாஸ் ஆடை அகம்)

இன்றைய நாகரிகத்தோடு இணைந்த
இயற்கை எழிலூட்டும் பலவர்ண

★ பட்டாடைகள் ★ ஜவுளித்தினுசுகள்
★ சேட் ஜீன்ஸ் ★ வேட்டி சால்வைகள்

மற்றும்
சிறுவர்களுக்கான ரெடிமேட் அயிட்டங்கள்
புதுப்புது டிசைன்களில் தெரிவு செய்து
நீங்கள் பெற்றிட

மறவாது விரைந்து நாடுங்கள்

### யோகாமணி ஆடை அகம்

16B, பெரியகடை, யாழ்ப்பாணம்.

குறிப்பு; இத்தாபனம் 21-04-1994 தொடக்கம் இல. 82, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்,

(இ-9171)

பூத்திட்ட புத்தாண்டில்
முத்தான ஓர் உதயம்

### அழகியல் உதிரிப்பாக மாடம்

[ முற்றிலும் மாறுபட்ட நிறுவனமாக திகழ்கிறது ]

உங்கள் வாகனங்களுக்கு செழிப்பான எதிர்காலம்

- மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள்
- எரிபொருள் வகைகள்
- சகல எண்ணெய் வகைகள்

மற்றும்

- பலவகை புதிய சைக்கிள்கள்
- சைக்கிள்களுக்கான உதிரிப்பாகங்கள்
- சகலவகை காகிதாதிப் பொருட்கள்

புத்தாண்டின் மலர்வில்
சேரனின் புதிய வாணிபப் பகுதி உதயம்!

நாளை (18-04-1994) காலை 9. 21 மணியளவில் மங்களகரமாக
திறந்து வைக்கப்படவுள்ளது

யாழ் குடாநாட்டு மக்களின் மாத்திர பண்டங்களின்

தேவையை பூர்த்தி செய்ய

சகலவகை காகிதாதிப் பொருட்கள்

இவையாவும்

தரமானவை! நீடித்துழைப்பவை!!

இவற்றினைப் பெற்று நீங்கள் பூரிப்படைய
இன்றே விரையுங்கள்!

**அழகியல் உதிரிப்பாக மாடம்**

இல 71, லெப் கேணல் சந்தோசம் தெரு,
(கஸ்தூரியார் வீதி) யாழ்ப்பாணம். (இ-9159)

---

க. தெ. ப. நோ. கூ. சங்கம் கிளிநொச்சி

கரைச்சி பிரதேச செயலாளரும்,

கூட்டுறவுப் பிரதி ஆணையாளருமாகிய



## செல்வி இந்துமதி நாகலிங்கம்

அவர்கட்கு

**எமது இதய அஞ்சலியை சமர்ப்பணமாக்கி நிற்கிறோம்**

அன்னையே பாதிவழியில் சென்றாயோ?

நினைவுகளில் உறைந்து விட்ட சமுதாயத்தின் அன்னையே
கூட்டுறவுக் கை கொடுத்து நாட்டுயர்வு காண விழைந்தாய்
நாடி வந்த வேளையெல்லாம் தேடி இடர் களைந்தாய்
வாடி நாமும் நிற்கையில் கோடி நலன் புரிந்தாய்
காலன் அவன் உன் உயிர் கவர்ந்த மாயம் என்னவோ
பாலர் நாமும் பரிதவிக்க பாதி வழியில் சென்றாயோ?

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

அங்கத்தவர்,

(8061) நெறியாளர், பணியாளர்.

---

தேவையை பூர்த்தி செய்ய

**அர்ச்சுனா சாலையில் அமைகின்றது!**

# எழிற் கூடம்

- அலுமீனியம், எவர்சில்வர் போன்றவற்றிலான சமையல் பாத்திர வகைகள்
- மங்களகரமான நாட்களில் உபயோகிப்பதற்கு தேவையான எவர்சில்வர் பாத்திர வகைகள்
- மற்றும் பிளாஸ்ரிக், அழகுசாதனப் பொருட்கள்
- பல்வகை அழகுமிக்க பரிசுப் பொருட்கள்

இவை யாவும

**தரத்தால் உயர்ந்தவை! நீடித்துழைப்பவை!!**

இவற்றைப் பெற்று உங்கள் தேவையை பூர்த்தி செய்து
மகிழ்வைப் பெருக்கிட நாடுங்கள்

V

## எழிற் கூடம்

அர்ச்சுனா சாலை, யாழ்ப்பாணம்.

(இ-9174)

சிந்தனைக்கு

அரசியல் வாதிக்கு ஏற்ற நினைவாற்றல் எனது நினைவிற் கொள்வது எதை மறப்பது என்பதை அறிந்த ஆற்றல்

— ஜான் மார்லி

# ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 17-04-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2021

தபால் பெட்டி எண் 05


## மீண்டும் வேதாளம் ...

சிறிலங்கா ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவிற்கும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் அமைச்சருமான தொண்டமானுக்கும் இடையில் கடந்த சில தினங்களின் முன் நிகழ்ந்த சந்திப்பானது தென்னிலங்கை அரசியலில் ஏற்பட்டுள்ள ஒரு திருப்பம் என அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகின்றது. இச் சந்திப்பு குறித்து தற்பொழுது வெளிவரும் தகவல்கள் முற்று முழுதாக சரியானவையாக இருப்பின் அரசியல் வட்டாரங்களில் கருதப்படுவதும் சரியானதென்றே கொள்ள முடியும்,

ஏனெனில் ஆட்சிக்கு வந்த பின்னர் இ.தொ.காவை படிப்படியாக ஓரம் கட்டி வந்த ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா மீண்டும் தொண்டமானின் உதவியை நாடுவதென்பது தொண்டமானின் அரசியல் பலம்பற்றி காலம் கடந்த நிலையிலாவது அவர் புரிந்து கொண்டுள்ளார் என்பதையே காட்டுகின்றது. ஆனால் இதைப்புரிந்து கொள்ள டி.பி. விஜேதுங்காவிற்கு ஒரு தேர்தல் தோல்வி அவசியமாகவிருந்தது என்பதுதான் அவலம்!

ஆனால் காலம் கடந்தாவது புரிந்து கொண்ட டி.பி. விஜேதுங்கா தனது தேர்தல் வெற்றிக்காக உடனடியாக அதனைப் பயன்படுத்தும் முயற்சியிலும் ஈடுபட்டார். இந்த வகையிலேயே தொண்டமானைச் சந்தித்துப் பேச டி.பி. விஜேதுங்கா இணங்கியுள்ளார் என்பதில் சந்தேகப்பட எதுவுமில்லை,

ஆனால் டி.பி. விஜேதுங்காவின் கொள்கைக்கும் தொண்டமான் கூறிக்கொள்ளும் அவரது கொள்கைக்கும் இடையிலும் பெருத்த வேறுபாடுகள் உண்டு. இருப்பினும் தேர்தலில் தொண்டமான் உதவி அவசியம் தேவை என்ற நிலையிலேயே டி.பி. விஜேதுங்கா அவரை நாடியுள்ளார். பலகால இடைவெளியின் பின்னர் தொண்டமானைச் சந்தித்த டி.பி. விஜேதுங்கா, ''இருவரும் எழுபது வயதைத் தாண்டியவர்களாக உள்ளோம். வேறுபாடுகளை மறந்து ஒருமுகமாகச் செயற்படுவோம்'' எனக் கூறியுள்ளதில் இருந்தே வயதைத்தவிர இருவருக்கும் இடையில் கூறிக்கொள்ள வேறு எந்த ஒற்றுமையும் இல்லை என்பதை சகலரும் புரிந்து கொள்ள முடியும்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வேண்டும்; வெற்றி பெற வேண்டும் என்ற குறிக்கோளுடன் மட்டும் செயற்படும் டி.பி. விஜேதுங்கா அரசியலில் ஏற்பட்டுள்ள

அழைப்பாணையை ஏற்று நீதிமன்றம் வந்தவர்

# பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தில் தடுத்துவைப்பு

(கொழும்பு)

மேல்நீதிமன்றத்தின் அழைப்பாணை கிடைத்ததையடுத்து நீதிமன்றுக்கு சமுகமளித்த இருவர் பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டனர். வவுனியா நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்ட இருவர் கொழும்பு மேல்நீதிமன்றத்தால் மீண்டும் தடுத்து வைக்கப்பட்ட இந்நிகழ்ச்சி அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது பாலிப்போடி சிவரட்ணம் மற்றும் ஆறுமுகம் லோகநாதன் ஆகிய இரண்டு பொலீஸ்காரர்களும் மட்டுநகரைச் சேர்ந்தவர்களாவர். 1992ஆம் ஆண்டில் தாண்டிக்குளம் பகுதியில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போது வடபகுதிக்கு தடைசெய்யப்பட்ட பொருட்களைஎடுத்துச் செல்ல உதவியதாகக் குற்றம் சாட்டப்பட்டு வவுனியா பொலிஸ்நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டனர். 45நாட்கள் தடுத்துவைக்கப்பட்டபின்னர் வவுனியா நீதிமன்றத்தால் பிணையில் விடப்பட்டனர்.

சுமார்ஒன்றரை வருடத்தின் பின் மேல்நீதிமன்றத்தின் அழைப்பாணையை ஏற்று கொழும்பு மேல்நீதிமன்றத்திற்கு வந்த இவர்களிடம் பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும் அவசரகால சட்டத்தின் கீழ் இவர்களால்எப்படி வெளியில் போக முடிந்தது என்று நீதிபதி கேள்வி எழுப்பினார்.

உங்கள் அழைப்பாணையை ஏற்று வந்தவர்களை முன்னைய பிணையில் செல்ல அனுமதிக்க வேண்டும் என்று சட்டத்தரணிகள் கோரினர்.

எனினும் பொலிஸ் உத்தியோகத்தர்களான இவர்கள் தேசிய பாதுகாப்பிற்கு ஆபத்தானவர்கள் என்று அரச தரப்பு சட்டத்தரணி தெரிவித்ததை ஏற்ற நீதிபதி அவர்கள் இருவரையும் ஜூன்மாதம் 29-ம் திகதிவரை தடுத்துவைக்குப்படி உத்தரவிட்டார்.

# 30 செஞ்சிலுவை ஊழியர்கள் றுவாண்டாவில் படுகொலை

## தலைநகரில் கடும் யுத்தம்

(கிகாலி)

சுமார் 30றுவாண்டா செஞ்சிலுவை சங்க ஊழியர்கள் அங்கு தற்போது நடைபெறும் போரில் நேற்று முன்தினம் கொல்லப்பட்டனர். செஞ்சிலுவை சங்க வரலாற்றில் ஒரே தடவையில் இவ்வளவு தொகையான செஞ்சிலுவை ஊழியர்கள் கொல்லப்பட்டது இதுவே முதற்தடவை என ஜெனிவாவில் உள்ள சர்வதேச செஞ்சிலுவை சங்க தலைமையகம் அறிவித்துள்ளது.

எனினும் கொல்லப்பட்ட றுவாண்டா செஞ்சிலுவை ஊழியர்களின் தொகை இதைவிட அதிகம் எனக் கூறப்படுகிறது. றுவாண்டா ஜனாதிபதி கொலைப்பட்டதை தொடர்ந்து இருவாரங்களாக அங்கு நடைபெற்றுவரும் இனப்போரினால் இதுவரை 2000 பேர் பலியாகியுள்ளனர்.

இதேவேளை றுவாண்டா தலைநகர் கிகாலியை வந்தடைந்துள்ள றுவாண்டா சிறுபான்மை இன கிளர்ச்சியாளர்களுக்கும் றுவாண்டா இராணுவத்திற்கும் இடையில் தலைநகரில் கொடூரமான போர் நடைபெற்றுவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தலைநகர் இரு தரப்பினரினதும் இரு கட்டுப்பாட்டு வலயங்களாக பிரிந்துள்ளதாக கூறப்படுகிறது. றுவாண்டாவில் 85 சதவீத ஹூடு இன பெரும்பான்மையினரும் 12 சதவீத டுட்சி சிறுபான்மையினரும் 30 ஆண்டுகாலமாக இனப்போரில் ஈடுபட்டு வருகின்றனர்.

# றுவாண்டா தேவாலயத்தில் 1200பேர் அரசுப் படையினரால் கொலை

றுவாண்டாவில் அரசுப் படையினர் ஒரு கிராமத்தின் தேவாலயத்துள் புகுந்து அங்கிருந்தவர்களில் குழந்தைகள் உட்பட 1200 பேரைச் சுட்டுக் கொன்றுள்ளனர்.

சம்பவத்தை நேரில் பார்த்த ஸ்பெயின் நாட்டு செய்தியாளர் ஒருவரை மேற்கோள் காட்டி பி.பி.சி மேலும் குறிப்பிடுகையில் தலைநகர் கிகாலிக்கு அருகேயுள்ள இக்கிராமத்தின் தேவாலயத்திற்கு வெளியே சடலங்கள் மலைபோலக் குவிக்கப்பட்டு இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

இதனிடையே றுவாண்டாவில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள சுமார் 2500 பேரைக் கொண்ட ஐ.நா. அமைதிப் படை விலக்கிக் கொள்ளப்பட மாட்டாது என்று ஐ.நா. கூறியுள்ளது.

# நிவாரணம் வழங்காததால் அகதிமுகாமில்பட்டினிநிலை

மட்டக்களப்பு மாவட்டத்தின் அகதிகள் முகாம்கள் பலவற்றில் தங்கியிருக்கும் அகதிகள் கடந்த ஒருமாதகாலமாக பட்டினி நிலைக்கு உள்ளாகியிருப்பதாக தெரியவருகின்றது.

மாதம்தோறும் வழங்கப்பட்டு வந்தநிவாரண உணவுப் பொருட்கள் இவர்களுக்குவழங்கப்படாமல் நிறுத்தப்பட்டமையேஇதற்குகாரணம் எனக் கூறப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அகதிமுகாம்களில் உள்ள 1157 குடும்பங்களும், நண்பர் மற்றும் உறவினர் வீடுகளில் வாழும் 8706 குடும்பங்களும் இதனால் பாதிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. கடந்த டிசம்பரில் மூன்று மாதங்களுக்கான உணவு முத்திரை வழங்கப்பட்டபோதும் மார்ச் மாதத்தில் அவை முடிவடைந்து போனதை அடுத்தே இந்தநிலை தோன்றியிருப்பதாகத்தெரியவருகிறது.

# சந்திரசேகரன் விடுதலை செல்லசாமியின்முயற்சியாம்

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் மத்திய மாகாண சபையின் உறுப்பினருமான பெ. சந்திரசேகரனை விடுவிப்பதற்கு அமைச்சர் செல்லச்சாமி பெரும் முயற்சி எடுத்துள்ளார் என்று கொழும்பிலிருந்து வெளிவரும் தமிழ்ப்பத்திரிகையொன்றுசெய்தி வெளியிட்டுள்ளது.

குற்றப் புலனாய்வு பொலிசாரால் கொழும்பு 6ஆம்மாடியில் தடுத்து வைக்கப்பட்டிருந்தசந்திரசேகரனுடன் அமைச்சர் செல்லச்சாமி நேரில் சென்று மூன்று தடவைகள் பேச்சு நடத்தியதாகவும் அதனைத் தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சு மட்டத்தில் சந்திரசேகரனின் விடுதலைக்காக நான்கு தடவை அமைச்சர் செல்லச்சாமி பேச்சுக்கள் நடாத்தியதாகவும் மேலும் கூறப்பட்டுள்ளது.

# இந்துமா சமுத்திரத்தில் இந்திய-மாலே கூட்டுரோந்து

இந்துமா கடல் பிராந்தியத்தில் இந்தியாவும், மாலைதீவும் கூட்டாக ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. கடந்த ஒருவாரத்திற்கும் மேலாக நீடிக்கும் இக் கூட்டுரோந்து நட்பு நடவடிக்கையின் ஒரு பகுதி என்றும், இது மூன்றாவது தடவையாக நடைபெறுகிறது என்றும் மேலும் கூறப்படுகிறது. இந்தியாவின் கடலோர பாதுகாப்பு படையும், மாலைதீவின் தேசிய பாதுகாப்புப் படையும் இணைந்து இந்தக் கூட்டுரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

பாக்கு நீரிணையையும் உட்படுத்திய பகுதியில் கடல் மாசுபடுவதைத் தடுத்தல், தேடுதல், மீட்புப் பணிகள், கள்ளக் கடத்தல் தடுப்பு நடவடிக்கை என்பனவற்றிலும் இக் கூட்டுரோந்தின்போது படையினர் ஈடுபடுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜெயலலிதா நடத்துவது அடியாள் அரசியல் ஆகும்

## வாழப்பாடி குற்றச்சாட்டு

தமிழக முதல்வர் ஜெயலலிதா அடியாள் அரசியல் நடத்துகின்றார். இவ்வாறு சென்னையில் செய்தியாளர் மாநாட்டில் பேசிய தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறுகையில் தாமரைக்கனியை இந்த அளவுக்கு வளர்த்ததே ஜெயலலிதா தான் என்றும் குற்றம் சாட்டினார். அத்துடன் தமிழக அரசின் அடியாள் அரசியலை எதிர்த்து இம் மாதம் 25ம் 28ம் திகதிகளில் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் முன்பு மறியல் போராட்டம் நடத்தப்படுமெனவும் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வேண்டும்; வெற்றி பெற வேண்டும் என்ற குறிக்கோளுடன் மட்டும் செயற்படும் டி.பி. விஜேதுங்க அரசியலில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையைத் தவிர்ப்பதற்காக ஏதோ ஒருவழியில் இ.தொ.கா. வினதும், தொண்டமானினதும் ஆதரவை தேட முற்படுவது அவரைப் பொறுத்து அவசியமான தொன்றாகும். ஆனால் தான் பலமான நிலையில் இருப்பதாகக் கூறிக்கொள்ளும் தொண்டமான் மீண்டும் ஒரு முறை மலையக மக்களை காட்டிக் கொடுக்க முற்படுவதுதான் அபாயகரமானதாகும்.

இறிலங்கா ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா தீவிர இனவாதச் சிந்தனையும், செயற்பாடும் கொண்டவர் என்பது உலகம் அறிந்த விடயம். இலங்கையில் சிங்களவரைத் தவிர வேறு இனங்கள் இருப்பதையே அவர் ஏற்றுக் கொள்ளாதவர். டி.பி-யின் இனவாதம் குறித்து அமைச்சர் தொண்டமானே பல தடவை பகிரங்கமாக கூட்டங்களிலும், அறிக்கைகளிலும் தெரிவித்துள்ளார். இந்நிலையிலும் டி.பி. விஜேதுங்காவுடன் அமைச்சர் தொண்டமான் உறவைப் புதுப்பிக்க முற்படுவதன் காரணம் என்ன?

எனக்கு மூக்குப் போனாலும் பரவாய் இல்லை எதிரிக்குச் சகுனப் பிழை வந்தால் போதும் என்ற நிலையே இதற்கு காரணமாகும். அதாவது மலையக மக்களின் நிலைமை எக்கேடு கெட்டாலும் பரவாய் இல்லை செல்லச்சாமி ஓரங்கட்டப்பட வேண்டும் என்பதே டி.பி. யுடன் தொண்டா உறவு கொள்வதற்குக் காரணமாகும்.

இது ஒரு வகையில் மலையக தமிழ்த் தலைவர்களின் அவல நிலையைக் காட்டுவதாகவே உள்ளது. அமைச்சர் தொண்டமான் ஐ.தே.க விற்கு எதிராகச் செயற்பட முயன்றபோது செல்லச்சாமியை வைத்து இ.தொ.காவை பிளவுபடுத்த ஐ.தே.க முனைந்தது. அதில் ஓரளவு வெற்றியும் பெற்றது. மத்திய மாகாண சபை ஆட்சியை காப்பாற்றியும் கொண்டது.

தற்பொழுது அதே முரண்பாட்டை வைத்து தொண்டமானை தனது வைக்குள் போட முற்படுகின்றது. தொண்டமானும், ஐக்கிய தேசிய கட்சியின் இனவாதம் இனவெறி என்பதைவிட செல்லச்சாமியுடன் ஏற்பட்டுள்ள முரண்பாடும், போட்டியுமே முதன்மையாகத் தெரிகின்றது.

அதற்காக எக் காட்டிக் கொடுப்பிற்கும் தயார் என்பதே தொண்டமானின் நிலைப்பாடாகும். ஆனால் தமிழ்த் தலைவர்களைப் பொறுத்து இவ்வாறான காட்டிக் கொடுப்புக்கள் ஒன்றும் புதுமையான தொன்றல்ல. இதுவே சிங்கள அரசுகள் என்றும் தமது இனவெறிக் கொள்கையை வெற்றிகரமாக அமுல்படுத்திச் செல்வதற்கு பேருதவி புரிந்து வந்துள்ளது என்பதும் மறுப்பதற்கில்லை.

---

ஸ்பெயின் நாட்டு செய்தியா இருப்பதாகவும் தெரிவித்துள் கூறியுள்ளது.

# உலக வர்த்தக ஒப்பந்தத்தில் 120 நாடுகள் கைச்சாத்திட்டன

(மார்கேஸ்)

கெட் எனப்படும் உலக வர்த்தக ஒப்பந்தத்தில் இந்தியா மற்றும் சிறிலங்கா உட்பட நூற்றி இருபதுக்கும் அதிகமான நாடுகள் நேற்று முன்தினம் கையெழுத்திட்டுள்ளன. உருகுவேயில் ஆரம்பமாகி கடந்த எட்டு ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்த பேச்சுவார்த்தைகளின் இறுதியில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்து இடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சுமார் நாற்பது சதவீத வரிகளைக் குறைத்து புதிய உலக வர்த்தக முறைமை ஒன்றை ஏற்படுத்த இந்த ஒப்பந்தம் வகை செய்கின்றமை தெரிந்ததே.

மொராக்கோ நாட்டின் மார்கேஸ் நகரில் கடந்த நான்கு நாட்களாக நீடித்த அமைச்சர்கள் மட்டப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இவ் ஒப்பந்தத்தின் மூலம் கெட் என்பதற்கு பதிலாக உருவாக்கப்படவிருக்கும் உலக வர்த்தக அமைப்பு உலக வங்கியை போல செயற்படும் என்றும், அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் செயற்படலாம் என்றும், சேவைத்துறை மற்றும் அறிவு சார் சொத்துரிமைப் பாதுகாப்பு உட்பட உலக வர்த்தகத்தின் பல்வேறு அம்சங்களையும் கண்காணிக்கும் என்றும், தெரிவிக்கப்படுகின்றது.

---

இடைத்தேர்தலில்

# மூப்பனார், வாழப்பாடி போட்டியிடவேண்டும்

(சென்னை)

மைலாப்பூர் இடைத்தேர்தலில் மூப்பனாரும் பெருந்துறை தேர்தலில் வாழப்பாடி இராமமூர்த்தியும் போட்டியிடவேண்டும் என காங்கிரஸ் எம். எல். ஏ செல்வராஜ் கேட்டுள்ளார். தமிழகத்தில் காங்கிரஸ் வாழப்பாடியால் அல்லோலகல்லோலப்படுகிறது. அகில இந்திய காங்கிரஸ் கட்சியைக் கேட்காமல் இவரே தனியாக தன்னிச்சையாக பொது வேட்பாளரை ஆதரிப்பதாகவும் இடைத் தேர்தலில் காங்கிரஸ் போட்டியிடாது என்றும் அறிவிக்கின்றார். இவருக்கு யார் இந்த அதிகாரத்தை கொடுத்தது எனவும் செல்வராஜ் கேட்டுள்ளார்.

காங்கிரசை வளர்த்துள்ளதாக கூறும் வாழப்பாடி தனித்து நின்று இடைத்தேர்தலில் வெற்றிபெற வேண்டும். அதற்காக இந்த மைலாப்பூர் பெருந்துறை இடைத்தேர்தலில் மைலாப்பூரில் மூப்பனாரும் பெருந்துறையில் வாழப்பாடியும் போட்டியிட்டு வெற்றி பெற்று சட்டப் பேரவையில் ஒற்றுமையாக செயற்பட வேண்டும். நிச்சயம் இவர்கள் இருவரும் போட்டியிடுவர் என நம்புகின்றோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

---

# செஞ்சிலுவை தூதுவர்

(லண்டன்)

பிரிட்டிஷ் செஞ்சிலுவைச் சங்க தூதுவராக பிரிட்டிஷ் இளவரசி டயானா பதவி ஏற்பார். பிரிட்டிஷ் செஞ்சிலுவைச் சங்க இயக்குநரை சந்தித்த டயானா தாம் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து கலந்துரையாடியுள்ளார்.

எலிசபத் மகாராணி செஞ்சிலுவைச்சங்க தலைவியாகவும் அவரின் தாயார் உதவித் தலைவியாகவும் உள்ளனர்.

---

**நாம் வாழ எம் மண்ணில் வளமுண்டு - ஏன் மண்டியிட வேண்டும் மாற்றானிடம்**

---

மேலும் கூறுகையில் தாமரைக் கனியை இந்த அளவுக்கு நடத்தப்படுமெனவும் தெரிவித்தார்.

# தி. மு. கவில் இப்போது சிறுசிராய்ப்பு ஏற்பட்டுள்ளது

**- மு. கருணாநிதி**

(சென்னை)

வை. கோபாலசாமி விலகியதால் தி மு க உடையவில்லை சிறு சிராய்ப்புத்தான் ஏற்பட்டுள்ளது என்று தி.மு.க தலைவர் மு. கருணாநிதி கூறியுள்ளார்.

கடலூர் மஞ்சக் குப்பம் பகுதியில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டுபேசிய அவர்மேலும் கூறுகையில்,

நாட்டின் நிர்வாகம், நீதித்துறை, சட்டமன்றம், பத்திரிகைகள் ஆகியவைகள்தான் ஜனநாயகத்தின் தூண்களாக, தூண்டுகோலாக விளங்க வேண்டும். ஆனால் இவை தமிழ் நாட்டில் எப்படிச் செயற்படுகின்றன என்பதை ஆராயவேண்டும்.

இன்றைய தமிழக அரசு நிர்வாகம் காளையர் கோவிலின் மின்சாரக் குதிரைபோல இருக்கிறது. அந்த மின்சாரக் குதிரை ஓடுவது போலவும், வண்டிச் சக்கரம் சுழல்வது போலவும் அதை ஓட்டக் கூடிய சாரதி சாட்டையால் குதிரையை அடிப்பது போலவும் தோன்றுகிறது. ஆனால் அந்தக்குதிரை ஓடுவதில்லை. அதேபோலத்தான் இன்றைய அ. தி மு. க- ஆட்சியும்

எந்த சக்தியாக இருந்தாலும், அது சகதியாக இருந்தாலும் சரி, சதியாக இருந்தாலும் சரி தி மு கவை வீழ்த்தினால் சரி என்று சிலபேர் நினைக்கிறார்கள் பண பலத்தை வைத்தும் சலுகைகளை கொடுத்தும் தி. மு கவை உடைக்கும் முயற்சி நடக்கிறது. ராவணனிடம் இருந்து ஆட்சியைப் பிடுங்கி விபீடணனிடம் கொடுத்தார் ராமர். ஆனால் இந்தக்காலத்து ராவணனிடம் அது நடக்காது. தி. மு. கவில் இப்போது ஏற்பட்டிருப்பது சிறு சிராய்ப்பு தான் காயம் அல்ல வீட்டிலுள்ள பானைகள்தான் உடைந்திருக்கின்றன. வீடு அப்படியே இருக்கிறது. எனவே வீட்டைக் காப்போம் நாட்டைக் காக்க எனவும் தெரிவித்தார்.

---

# புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்.

1994 04 17ஞாயிறு-இரவு

8 01 மணிக்கு - அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி "தியாகத் தீயில் அன்னை பூபதி"
8.10 மணிக்கு - இசையரங்கம்- நிகழ்ச்சியில் பாடுபவர் - திரு பெரியதம்பி
8.30 மணிக்கு - செய்திகள்
8.40 மணிக்கு - தொடர் நாடகம்- இலங்கைமண்- 22 ஆம் அங்கம்.

1994-04-18திங்கள்-காலை

7.02 மணிக்கு - மாவீர வணக்கம்.
7.15 மணிக்கு - அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி "பெண் இனத்தின் ஒளி விளக்கு"
7-25 மணிக்கு - மணிஆரம்.
7.45 மணிக்கு - செய்திகள்.
7.50 மணிக்கு - பத்திரிகைச் செய்திகள்.
7.55 மணிக்கு - தாயகப் பாடல் என்பன இடம் பெறும்.

## பிற்போடப்பட்டுள்ளது

மிருதங்கக் கலைஞர் திரு. T. பாக்கியநாதன் அவர்களுக்காக இன்று 17-04-94 (ஞாயிறு) இளங் கலைஞர் மன்ற கலா மண்டபத்தில் நடைபெற இருந்த நிதியுதவிக் கலை நிகழ்ச்சி தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. நிகழ்ச்சிக்கான மறு அறிவித்தல் பின்னர் அறிவிக்கப்படும்.

(8056) ஒழுங்கமைப்பாளர்கள்.

அமரர் மாப்பாணபிள்ளை

நித்தியானந்தசிவம்

(ம.பி.போ.வ.சபை முன்னாள் சாலைப் பரிசோதகர்)

## நினைவு மடல்

இனிய நித்தி.

இன்றோடு திங்களொன்று உருண்டோடி விட்டது! சக தோழனையும், சக நோயாளியையும் பிரிந்து தனியனாக எனது மிதிவண்டி, நான் பலமிழந்து நிற்பதாகத் தெரிகின்றது. நெடுங்குன்றனைய உன் மேனியும், நெஞ்சுநிறை நேர்மையும் நினைவுகளை இரை மீட்கும் போது நெஞ்சில் முட்டுகிறது! கண்கள் சுரமாகின்றன!! 1994-03-18 இலும் வழமைபோலப் பணிக்கு நாம் சென்றுவந்ததும் நள்ளிரவில் உன் வீட்டில் நெஞ்சத்தை உருக்கும் அந்த அவல ஒலி எழுந்ததும் நீங்காத நெருப்புச் சுடராக எரிகிறது.

என்னால் உன் இழப்பை ஏற்க முடியவில்லை. கண்ணாய் உனைக்கொண்ட காதல் மனையாளும் பின்னால் உன்பேர் வழங்க ஒரு மகனும் மண்ணில் உனை ஈன்ற மாதாவும் உடன்பிறப்பு உறவுகளும் உனை மறத்தல் எவ்வாறு? அமைதியான உன் இறுதித் துயில்போலவே இவர்கள் நெஞ்சில் நீ என்றும் வாழ்வாய்!

நீங்காத நினைவுகளுடன்,
ஆ. கந்தசாமி
(8022) சரவெட்டி மத்தி.

## கண்ணீர்ப் பூக்களால் காணிக்கை!

மக்கள் சேவைக்கு: 1945.08.26



மண்ணின் மடியில் 1994.04.14

### செல்வி இந்துமதி நாகலிங்கம்

(பிரதேச செயலரும், விசேட இணையாளரும் கரைச்சி - கிளிநொச்சி)

எங்கள் மண்ணின்
ஏணிப் படிகளை
நாங்கள் ஏறிட
ஏற்றிய தாயே!

'மதி'யே நீ ஏன்
ஒளிதர மறுத்தாய்?
விதியே 'இந்து'வை
நீ ஏன் ஒழித்தாய்?

ஈர ரேகைகள்
எங்கள் முகங்களில் இனி
உங்கள் எண்ணம்

## கப்டன் அறிவுக்கு மக்கள் திரண்டு அஞ்சலி

(வடமராட்சி)

விபத்தில் வீரச்சாவடைந்த இன்பருட்டியைச் சேர்ந்த கப்டன் அறிவு (வேலும் மயிலும் வேல்ராஜ்) என்னும் போராளியின் வித்துடலுக்கு மக்கள் இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

இன்பருட்டியில் அவரது இல்லத்தில் வித்துடல் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு கரையோர வீதி நெடுகிலும் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் எடுத்துச் செல்லப்பட்டது. இவரது வித்துடல் பாண்ட் வாத்திய இசையுடன் நவிண்டில் எள்ளங்குளம் மாவீரர் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு நேற்று விதைக்கப்பட்டது.

மக்கள் வித்துடலுக்கு பூரண கும்பங்கள் வைத்து மலர் இட்டு தீபமேற்றி, மலர் மாலையிட்டு இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். (யோ)

## அன்னை பூபதி

வும் இடம்பெறும். பிற்பகல் 4.50 மணிக்கு உண்ணாவிரத நிறைவுரையும் அதைத்தொடர்ந்து நீராகாரம் வழங்கப்பட்டு உண்ணாவிரதம் நிறைவு செய்யப்படும்.

இன்று நல்லூர் கோட்டத்தில் கொக்குவில் மாதகனை முருகன் கோயில் முன்றல், கோப்பாய் பிரிவில் உரும்பராய் அன்னை பூபதி கலை அரங்கு, உடுவில் தெல்லிப்பழை பிரிவில் சுன்னாகம் முருகமூர்த்தி கோயில் முன்றல், சண்டிலிப்பாய் பிரிவில் நவாலி வேலக்கை பிள்ளையார் வீதி, சங்கானையில் சுழிபுரம் வடக்கம்பரை அம்மன் கோவில் முன்றல், யாழ். கோட்டத்தில் அத்தியடி பிள்ளையார் கோவில் முன்றல், தென்மராட்சி கோட்டத்தில் நாவற்குழி லவனிதா குடியிருப்பு, பண்டிதர் குடியிருப்பு, கைதடிப் பிரிவில் நாவற்குழி முருகன் கோவிலடி, சாவகச்சேரி பிரிவில் மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலையம், கொடிகாமம் பிரிவில் கச்சாய் அம்மன் கோவில் முன்றல், பளையில் இத்தாவில் பாடசாலை, பருத்தித்துறை கோட்டத்தில் புலோலி கந்தியூர் சனசமூக நிலையம், கரவெட்டியில கட்டைவேலி நுணாவில் பிள்ளையார் கோவில் முன்றல், உடுப்பிட்டி பிரிவில் இலக்கணாவத்தை மேஜர் கோபு சனசமூக நிலையம் ஆகிய பகுதிகளில் அடையாள உண்ணாவிரதங்கள் அனுஷ்டிக்கப்படும்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 16-04-1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 1656

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:-

40-6032, 27-9327, 42-3329, 24-3071, 26-3321, 26-8600, 40-4429, 28-1730, 26-2108, 27-9090, 41-9327, 26-3545, 24-6646, 41-1996, 26-3997, 26-0763, 41-9659, 40-9188, 41-4194, 24-4207.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:-

26-6361, 26-3530, 26-8138, 26-5604, 28-0523, 24-6533.

## நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம்

தியாக தீபம் அன்னை பூபதியின் 6-ம் ஆண்டு நினைவாக 17-04-94 ஞாயிற்றுக்கிழமை காலை 7-00 மணி முதல் கொக்குவில் மாதகனை கந்தசாமி கோவில் முன்றலில் நல்லூர் பிரதேச வர்த்தகர்களினால் உண்ணாவிரதம் அநுஷ்டிக்கப்படவுள்ளது.

## கருத்தரங்கு

தெல்லிப்பழை, சண்டிலிப்பாய் கல்விக்கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகளில் ஆண்டு இரண்டில் கல்வி பயிற்றும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சிக் கருத்தரங்கு இம்மாதம் 21, 22, 23 ஆம் திகதிகளில் முறையே மருதனார் மடத்திலுள்ள யாழ்யூனியன் கல்லூரியிலும், மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் நடைபெறுமென்று கோட்டக்கல்விப்பணிப்பாளர் திரு. த. துரைலிங்கம் அறிவித்துள்ளார்.

## வேறொருவரையும

தனக்கு உயிராபத்து இருப்பதாகவும் எனவே தனக்கு உரிய பாதுகாப்பு தருமாறு கொலை செய்யப்பட்ட ராஜ்மான் உசேன் ஜனாதிபதிக்கும் கட்சி பொதுச் செயலாளருக்கு அறிவித்து இருந்தார் என்றும் ஆனால் இன்றுவரை அது பற்றி இவர்கள் அக்கறை செலுத்தவில்லை என அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

## 15 லட்சம்

ஐந்து லட்சத்திற்கும் அதிகமான வாக்குகளை கூடுதலாக முன்னணி பெற்றுக் கொண்டுள்ளது. ஜனாதிபதித் தேர்தல் நடந்தால் 15லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் நாம் வெற்றி பெறுவோம். ஒற்றுமையும், தைரியமும் தொடர்ந்தும் இருந்தால் ஐ.தே. கட்சி அரசைத் தேர்தலில் தோற்கடிக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

## கொலை

வரான எம். ஆர். ஹவுசதினும் அவரின் மகனையும் பொலிசார் நேற்று முன்தினம் இரவு கைது செய்தமை குறிப்பிடத்தக்கதாகும். கைது செய்யப்பட்ட ஹவுசதீன் சுட்டு கொல்லப்பட்ட ராஜ்மான் உசேனின் வீட்டுக்கு எதிர் வீட்டில் வசித்து வந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

துப்பாக்கி நபர்கள்கொலை செய்வதற்கு முன்னர் ஹவுசதீன் வீட்டில் இருந்ததாகவும் இதனாலேயே இவரை பொலிசார் கைதுசெய்ததாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## தாண்டிக்குளத்தில்

றனர்.

கண்கள், கைகள் கட்டப்பட்ட நிலையில் பலர் தங்கவைக்கப்படுகின்றனர் என்று எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

காலையில் தடுத்துவைக்கப்படும் இளைஞர்களும், யுவதிகளும் மறுநாள் காலையே விடுதலை செய்யப்படுகின்றனர்.

விசாரணையின்போது

## மரண அறிவித்தல்கள்

### நல்லதம்பி பாலசுப்பிரமணியம்

(வெள்ளி மெயில்)

காரைநகர் வாரிவளவைப்பிறப்பிடமாக கொண்ட நல்லதம்பி பாலசுப்பிரமணியம் 14.04.94 அன்று கனடாவில் காலமாகி விட்டார். அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி வள்ளியம்மையின் அன்பு மகனும், பத்மாவதி (தங்கம்)யின் அன்புக்கணவரும், விக்னராஜா, சிவராஜா, விநாயகராசா (அப்பு), விஜயராணி, கிருஷ்ணவதனா ஆகியோரின் அருமைத் தந்தையும், திருமதி விக்கினராஜா ஜெயலலிதா, கருணாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும், கணேசன், நாகம்மா (பிள்ளை), ஆகியோரின் அன்புச்சகோதரரும் காலஞ்சென்ற இ. ம. கதிரவேலு செல்லம்மா தம்பதிகளின் மருமகனும், திருச்சிற்றம்பலம், தில்லைநடராசா, ஞானம், பாலா, திலகம், உமாதேவி, காலஞ்சென்றவர்களான தியாகராசா, சங்கரப்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் தகனக்கிரியைகள் 18.04.94 அன்று கனடாவில் நடைபெறும் என்பதை அறியத்தருகிறோம். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்
கு. ஞானம்

85, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். (8067)



சிற்பக் கலைஞர்

### திரு. வே. கந்தசாமி J.P.

சித்தன்கேணி கலைநகரைச் சேர்ந்த பிரபல சிற்பக்கலைஞரும், ஓவிய விற்பன்னரும், பிரபல சமூகத் தொண்டரும், இளைப்பாறிய ஆசிரியருமான திரு. வே. கந்தசாமி (சமாதான நீதவான்) அவர்கள் நேற்று காலமானார். அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை திங்கட்கிழமை பி.ப. 3மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

-குடும்பத்தினர்.

கலைநகர், சித்தன்கேணி.

உந்தன் எண்ணம்
எங்களில் உதிக்கும்.

கனகபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம்,
கனகபுரம் ஸ்ரீகாந்தா சனசமூக நிலையம்
கனகபுரம் விளையாட்டுக் கழகம்,
கனகபுரம் கருணாகரப் பிள்ளையார்
தேவஸ்தானம்

17-04-94 (8066)

உணர்வு பூர்வமான இந்த உண்ணாவிரதத்தில் அனைத்து வர்த்தகர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகொள்கிறோம்.

நன்றி

நல்லூர் பிரதேச
வர்த்தகர் சங்கம்

(இ-9177)

விசாரணையின் போது கிடைக்கப்பெறும் தகவல்களைப் பொறுத்து சிலர் உடனடியாகவும் விடுதலை செய்யப்படுகின்றனர். சிலர் அன்று மாலை விடுதலையாகின்றனர். ஆயினும் பலர் மறுநாள் பயணிகள் தொழும் பிற்கான பயணத்தை மேற்கொள்ளும்போதே விடுதலை செய்யப்படுகின்றனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (தி)

**வவுனியாவில்**

அனுமதிப் பத்திரமும் ஆராயப்படுகிறது.

அனுமதிப்பத்திரம் பெறாதவர்கள் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்படுவதுடன் தடுத்தும் வைக்கப்பட்டுள்ளனர் என்று அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. (தி)

**வெளிநாட்டு**

விற்தது:

இதேசமயம் கொழும்பு வெடிகுண்டுத் தாக்குதலுக்கும் சில மாதங்களுக்கு முன் அநுராதபுரம் அருகே பஸ் குண்டு வெடிப்பில் 10 பேர் கொல்லப்பட்டதற்கும் ஏற்கனவே உரிமை கோரியுள்ள போதும் இதை இராணுவத்தினர் அலட்சியம் செய்கின்றனர் எனவும் இத்தாக்குதல்களுக்கு விடுதலைப் புலிகளே காரணம் எனவும் இத்தகைய உத்திகள் புலிகளிடமே உள்ளது எனவும் அவர்கள் கூறுவதாக பி.பி.ஸி கருத்து தெரிவித்தது.

**மாத்தளையில்**

கொண்டனர் எனவும் இதற்காக நேரடிக பொலிஸார் கொழும்பில் இருந்தும், கண்டியில் இருந்தும் வரவழைக்கப்பட்டதாகவும் தற்பொழுது முழுமையான சோதனை மேற்கொள்ளப்பட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கலைநகர், சித்தன்கேணி.


(இ|9183)

# நெஞ்சின் நினைவலைகள்



வாரி அன்னம்மா

மண்ணில்: 2-05-1910
விண்ணில்: 13-04-1990



முருகர் நவமணி

மண்ணில்: 3-12-1928
விண்ணில்: 1-6-1971



இராஜபக்ஷ நளினி

மண்ணில்: 24-01-1979
விண்ணில்: 17-04-1989

நினைவில் நிறைந்து நின்றாலும் எம் கனவில் உங்கள் முகம் அழியாது
எம் இதயக் கோவிலிலே வடிப்பதற்கோ கண்ணீரே இல்லை
அத்தனையும் உங்கள் பாதங்களில் செலுத்திவிட்டோம்
ஆண்டுகள் பல சென்றாலும் உங்கள் நினைவலைகள் நோக்கி
எம் இதய அஞ்சலிகள்.

12/4 கெனடி வீதி,
நாவாந்துறை.

(8057)

உங்கள் பிரிவால் துயருறும்
நவமணி செல்வம் குடும்பத்தினர்



## திருமதி வல்லிபுரம் இரத்தினம்

சங்கானையைப் பிறப்பிடமாகக்கொண்ட வல்லிபுரம் இரத்தினம் 16-4-94 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற வல்லிபுரத்தின் மனைவியும், காலஞ்சென்ற கந்தசாமி, நாகேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் தாயாரும், நிற்சிங்கம், வேலுப்பிள்ளை, தவமணி ஆகியோரின் அன்பு மாமியாரும், பராசக்தி, சதானந்தராஜா, பத்மநாதன், பவளராணி, பத்மாதேவி சுசிலாதேவி, நிர்மலாதேவி, ரவிராஜன், கலாதேவி, ரவீந்திரன், கருணாகரன், விஜயகுமாரி, உதயகுமாரி மனோகரன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

இவரின் ஈமக்கிரியைகள் 17-4-94 (ஞாயிறு) இன்று காலை 10-00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுத் தகனக்கிரியைக்காக விளாவெளி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

தகவல்;

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.

(8058)

நி. பத்மநாதன்
(பேரன்)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.